# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

## பதவி வெற்றிடங்கள்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது:-

| பதவி | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. பணிப்பாளர் நாயகம் – (HM 2-1) | - 01 |
| 2. பணிப்பாளர் பதவிகள் | |
| 2.1 பணிப்பாளர் - நிர்வாகம் – (HM 1-1) | - 01 |
| 2.2 பணிப்பாளர் - போதைப்பொருள் தடுப்பு, கல்வி மற்றும் பயிற்சி – (HM 1-1) | - 01 |
| 2.3 பணிப்பாளர் - சிகிச்சையளிப்பு, புனர்வாழ்வளிப்பு மற்றும் வெளிநிலைச் சேவைகள் – (HM 1-1) | - 01 |
| 2.4 பணிப்பாளர் - ஆராய்ச்சி – (HM 1-1) | - 01 |
| 3. பிரதி/ உதவிப் பணிப்பாளர் பதவிகள் | |
| 3.1 பிரதி/ உதவிப் பணிப்பாளர் - சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு – (MM 1-1) | - 01 |
| 3.2 பிரதி/ உதவிப் பணிப்பாளர் - வெளிநிலைச் சேவைகள் – (MM 1-1) | - 01 |
| 3.3 பிரதி/ உதவிப் பணிப்பாளர் - நிதி – (MM 1-1) | - 01 |
| 3.4 சபை செயலாளர்/ சட்ட அலுவலர் – (MM 1-1) | - 01 |
| 4. கனிஷ்ட முகாமைத்துவ பதவிகள் | |
| 4.1 உளவளத்துணை அலுவலர் – (JM 1-1) | - 02 |
| 5. வினைப்படுத்தல்/ அமுலாக்கல்/ விரிவாக்கல் அலுவலர் பதவிகள் | |
| 5.1 உதவி உளவளத்துணை அலுவலர் – (MA 5-2) | - 05 |
| 5.2 உதவி விஞ்ஞான அலுவலர் – (MA 5-2) | - 02 |
| 6. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார்) பதவிகள் | |
| 6.1 தாதி அலுவலர் – (MA 2-1) | - 02 |
| 6.2 ஆய்வுகூட தொழில்நுட்பவலர் – (MA 2-1) | - 02 |

01. பதவிப் பெயர் - பணிப்பாளர் நாயகம்
**சேவை வகுதி - சிரேஷ்ட முகாமையாளர் (HM 2-1)**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01**

**அ. தகைமைகள்**

**அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** *(பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)*

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ உளவியல்/ மக்கள் தொடர்பாடல்/ முகாமைத்துவம்/ சமூக வேலைகள்/ சட்டம்/ வணிகவியல்/ இரசாயனவியல்/ கணக்கியல்/ தகவல் தொழில்நுட்பவியல்/ புள்ளிவிவரவியல் ஆகிய விடயத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்/ முகாமைத்துவம் பற்றிய அங்கீகரிக்கப்பட்ட தொழில்வாண்மை நிறுவனமொன்றில் கூட்டிணைவு உறுப்புரிமையைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்ட தகைமைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் அரச கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச்சட்ட சபையொன்றில்/ திணைக்களமொன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் முகாமையாளர் பதவிப்படிநிலைக்குரிய பதவியொன்றில் குறைந்தபட்சம் 18 (பதினெட்டு) வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு, குறைந்தபட்சம் இதில் 05 (ஐந்து) வருடங்கள் சிரேஷ்ட முகாமையாளர் பதவிப்படிநிலையில் இருந்திருத்தல் வேண்டும்.

*அல்லது*

02. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ உளவியல்/ மக்கள் தொடர்பாடல்/ முகாமைத்துவம்/ சமூக வேலைகள்/ சட்டம்/ வணிகவியல்/ இரசாயனவியல்/ கணக்கியல்/ தகவல் தொழில்நுட்பவியல்/ புள்ளிவிவரவியல் ஆகிய விடயத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேற்குறிப்பிட்ட கலாநிதிப் பட்ட தகைமைகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் அரச கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச்சட்ட சபையொன்றில்/ திணைக்களமொன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமையாளர் பதவிநிலைக்குரிய பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட அதிசிறப்பான சேவைக் காலத்தைக் கொண்ட அலுவலரொருவராக அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2. உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் சிரேஷ்ட முகாமையாளர் சேவை வகுதிக்குரிய (HM 1-1) பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 (ஐந்து) வருடங்கள் குறித்த விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அத்துடன்*

பன்முக செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்கு தலைமைத்துவம் வழங்குவதிலும் அதேபோல், மனித மற்றும் ஏனைய வளங்களை வினைத்திறனுடன் முகாமைசெய்வதிலும் மெய்ப்பித்த தேர்ச்சிநிலையைப் பெற்றிருத்தல்.

**ஆ. வயதெல்லை**

35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

இ. சம்பளக் குறியீட்டு இல. - **HM 2-1**

**ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம்** - HM 2-1 2016 (ரூ.91,645 – 12 x 2,700 – 124,045/-)
(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

**முக்கிய குறிப்பு: இது தவிர உத்தியோகபூர்வ வாகன உரித்தைப் பெறுவதோடு, பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல. 01/2015 (i), (ii) இற்கமைய எரிபொருள் படியும், PED 02/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொடர்பாடல் படியும், MSD 05/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைமைய தொழில்வாண்மைப் படியும் வழங்கப்படும்.**

02. **பணிப்பாளர் பதவிகள்**

2.1 **பதவிப் பெயர் - பணிப்பாளர் - நிர்வாகம்**
**சேவை வகுதி - சிரேஷ்ட முகாமைளாளர் (HM 1-1)**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை** – 01

**அ. தகைமைகள்**

**அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம்/ வணிகவியல்/ மனித வள முகாமைத்துவம்/ அரசாங்க நிருவாகம் ஆகிய விடயத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிக்குரிய விடயத்துறைக்குப் பொருத்தமான பட்டப்பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத் தகைமையைப் பெற்றுக் கொண்ட பின்னர் அரசாங்கத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச்சட்ட நிறுவனமொன்றில்/ சபையொன்றில்/ திணைக்களமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ பதவிப் படிநிலைக்குரிய (MM 1-1) பதவியொன்றில் குறைந்தபட்சம் 13 (பதின்மூன்று) வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** *(பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)*

1. மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முகாமைத்துவ சேவை (MM 1-1) வகுதியின் தரம் I இல் குறைந்தபட்சம் 03 (மூன்று) வருட காலம் குறித்த விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

*அத்துடன்*

குறித்த துறையில் பட்டப் பின்படிப்பு தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**ஆ. வயதெல்லை**

35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

**இ. சம்பளக் குறியீட்டு இல – HM 1-1**

**ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் - HM 1-1 2016 (ரூ.80,295 – 15 x 2,270 – 114,345/-)**
(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

**முக்கிய குறிப்பு: இது தவிர உத்தியோகபூர்வ வாகன உரித்தைப் பெறுவதுடன், பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல. 01/2015 (i), (ii) இற்கமைய எரிபொருள் படியும், PED 02/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொடர்பாடல் படியும், MSD 05/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொழில்வாண்மைப் படியும் வழங்கப்படும்.**

**2.2 பதவிப் பெயர் - பணிப்பாளர் (போதைப்பொருள் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி)**
**சேவை வகுதி - சிரேஷ்ட முகாமையாளர் (HM 1-1)**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01**

**அ. தகைமைகள்**

**அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூக விஞ்ஞானங்கள் விடயத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிக்குரிய விடயத்துறைக்குப் பொருத்தமான பட்டப்பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்ட பின்னர் அரசாங்கத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச்சட்ட நிறுவனமொன்றில்/ சபையொன்றில்/ திணைக்களமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் முகாமையாளர் பதவிப்படிநிலைக்குரிய பதவியொன்றில் (MM 1-1) குறைந்தபட்சம் சம்பந்தப்பட்ட துறையில் 13 (பதின்மூன்று) வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முகாமைத்துவ சேவை (MM 1-1) வகுதியின் தரம் I இல் குறைந்தபட்சம் 03 (மூன்று) வருட காலம் குறித்த விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அத்துடன்*

குறித்த துறையில் பட்டப் பின்படிப்பு தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**ஆ. வயதெல்லை**

35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது..

**இ. சம்பளக் குறியீட்டு இல – HM 1-1**

**ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் - HM 1-1 2016** (ரூ.80,295 – 15 x 2,270 – 114,345/-)
(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

**முக்கிய குறிப்பு: இது தவிர உத்தியோகபூர்வ வாகன உரித்தைப் பெறுவதுடன், பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல. 01/2015 (i), (ii) இற்கமைய எரிபொருள் படியும், PED 02/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொடர்பாடல் படியும், MSD 05/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொழில்வாண்மைப் படியும் வழங்கப்படும்.**

2.3 பதவிப் பெயர் - பணிப்பாளர் (சிகிச்சையளிப்பு, புனர்வாழ்வளிப்பு மற்றும் வெளிநிலைச் சேவைகள்)

சேவை வகுதி - சிரேஷ்ட முகாமையாளர் **(HM 1-1 )**

பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01

**அ. தகைமைகள்**

**அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ உளவியல்/ குற்றவியல்/ சமூக வேலைகள்/ முகாமைத்துவம்/ வணிகவியல்/ சட்டம் ஆகிய விடயத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, பதவிக்குரிய விடயத்துறைக்குப் பொருத்தமான பட்டப்பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத் தகைமையைப் பெற்றுகொண்ட பின்னர் அரசாங்கத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச்சட்ட நிறுவனமொன்றில்/ சபையொன்றில்/ திணைக்களமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ பதவிப்படிநிலைக்குரிய பதவியொன்றில் (MM 1-1) குறைந்தபட்சம் சம்பந்தப்பட்ட துறையில் 13 (பதின்மூன்று) வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முகாமைத்துவ சேவை (MM 1-1) வகுதியின் தரம் I இல் குறைந்தபட்சம் 03 (மூன்று) வருட காலம் குறித்த விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அத்துடன்*

குறித்த துறையில் பட்டப் பின்படிப்பு தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**ஆ. வயதெல்லை**

35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது..

**இ. சம்பளக் குறியீட்டு இல – HM 1-1**

**ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் - HM 1-1 2016 (ரூ.80,295 – 15 x 2,270 – 114,345/-)**
(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

**முக்கிய குறிப்பு: இது தவிர உத்தியோகபூர்வ வாகன உரித்தைப் பெறுவதுடன், பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல. 01/2015 (i), (ii) இற்கமைய எரிபொருள் படியும், PED 02/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொடர்பாடல் படியும், MSD 05/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொழில்வாண்மைப் படியும் வழங்கப்படும்.**

2.4 பதவிப் பெயர் - பணிப்பாளர் - ஆராய்ச்சி

சேவை வகுதி - சிரேஷ்ட முகாமையாளர் **(HM 1-1)**

பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01

அ. தகைமைகள்

அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ குற்றவியல்/ சமூக வேலைகள்/ புள்ளிவிவரவியல்/ இரசாயனவியல்/ தகவல் தொழில்நுட்பவியல் ஆகிய விடயத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிக்குரிய விடயத்துறைக்குப் பொருத்தமான பட்டப்பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத் தகைமையை பெற்றுக்கொண்ட பின்னர் அரசாங்கத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச்சட்ட நிறுவனமொன்றில்/ சபையொன்றில்/ திணைக்களமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் முகாமையாளர் பதவிப்படிநிலைக்குரிய பதவியொன்றில் (MM 1-1) குறைந்தபட்சம் சம்பந்தப்பட்ட துறையில் 13 (பதின்மூன்று) வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** *(பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)*

1. மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முகாமைத்துவ சேவை (MM 1-1) வகுதியின் தரம் I இல் குறைந்தபட்சம் 03 (மூன்று) வருட காலம் குறித்த விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அத்துடன்*

குறித்த துறையில் பட்டப் பின்படிப்பு தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**ஆ. வயதெல்லை**

35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

**இ. சம்பளக் குறியீட்டு இல – HM 1-1**

**ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் - HM 1-1 2016** (ரூ.80,295 – 15 x 2,270 – 114,345/-)
(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

**முக்கிய குறிப்பு: இது தவிர உத்தியோகபூர்வ வாகன உரித்தைப் பெறுவதுடன், பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல. 01/2015 (i), (ii) இற்கமைய எரிபொருள் படியும், PED 02/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொடர்பாடல் படியும், MSD 05/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொழில்வாண்மைப் படியும் வழங்கப்படும்.**

## 03. பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் பதவிகள்

3.1. பதவிப் பெயர் - பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் - சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு
சேவை வகுதி - மத்திய முகாமையாளர் (MM 1-1)
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01

அ. தகைமைகள்

அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ உளவியல்/ குற்றவியல்/ சமூக வேலைகள் ஆகிய விடயத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் பதவிக்குரிய துறையில் குறைந்தபட்சம் 03 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதிக்குரிய துறையின் பதவியொன்றில் தரம் II இல் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஆ. வயதெல்லை**

22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது..

**இ. சம்பளக் குறியீட்டு இல – MM 1-1**

**ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் -** MM 1-1 2016 **(ரூ.53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/-)**
(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

**முக்கிய குறிப்பு: இது தவிர PED 01/2015 இலக்க சுற்றறிக்கைக்கமைய பொது வாகன வசதியும், PED 02/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொடர்பாடல் படியும், MSD 05/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொழில்வாண்மைப் படியும் வழங்கப்படும்.**

3.2 **பதவிப் பெயர் - பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் - வெளிநிலைச் சேவைகள்**
**சேவை வகுதி - மத்திய முகாமையாளர் (MM 1-1)**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை** – 01

**அ. தகைமைகள்**

**அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ உளவியல்/ குற்றவியல்/ சமூக வேலைகள் விடயத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் பதவிக்குரிய துறையில் குறைந்தபட்சம் 03 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** *(பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)*

1. மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதிக்குரிய துறையின் பதவியொன்றில் தரம் II இல் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஆ. வயதெல்லை**

22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

இ. சம்பளக் குறியீட்டு இல **– MM 1-1**

**ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் -** MM 1-1 2016 **(ரூ.53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/-)**

(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

**முக்கிய குறிப்பு: இது தவிர PED 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய பொது வாகன வசதியும், PED 02/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொடர்பாடல் படியும், MSD 05/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொழில்வாண்மைப் படியும் வழங்கப்படும்.**

**3.3 பதவிப் பெயர் - பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் - நிதி**
**சேவை வகுதி - மத்திய முகாமையாளர் (MM 1-1)**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை –** 01

**அ. தகைமைகள்**

**அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்/ முகாமைத்துவம் அல்லது வணிகவியல் ஆகிய விடயத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேற்குறிப்பிட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் பதவிக்குரிய துறையில் குறைந்தபட்சம் 03 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

*அல்லது*

2. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

*அத்துடன்*

மேற்குறிப்பிட்ட இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் பதவிக்குரிய துறையில் குறைந்தபட்சம் 03 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதிக்குரிய துறையின் பதவியொன்றில் தரம் II இல் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஆ. வயதெல்லை**

22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

இ. சம்பளக் குறியீட்டு இல **– MM 1-1**

**ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் -** MM 1-1 2016 **(ரூ.53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/-)**

(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

**முக்கிய குறிப்பு: இது தவிர PED 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய பொது வாகன வசதியும், PED 02/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொடர்பாடல் படியும், MSD 05/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொழில்வாண்மைப் படியும் வழங்கப்படும்.**

3.4 பதவிப் பெயர் - சபை செயலாளர்/ சட்ட அலுவலர்
**சேவை வகுதி - மத்திய முகாமையாளர் (MM 1-1)**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01**

**அ. தகைமைகள்**

**அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தலும், உயர்நீதிமன்ற சட்டத்தரணியொருவராக இருத்தலும்.

*அத்துடன்*

சட்டத்தரணியொருவராகவும் நொத்தாரிசு ஒருவராகவும் 03 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஆ. வயதெல்லை**

22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

**இ. சம்பளக் குறியீட்டு இல – MM 1-1**

**ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் -** MM 1-1 2016 **(ரூ.53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575/-)**

(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

**முக்கிய குறிப்பு: இது தவிர PED 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய பொது வாகன வசதியும், PED 02/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொடர்பாடல் படியும், MSD 05/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய தொழில்வாண்மைப் படியும் வழங்கப்படும்.**

**04. கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதிக்குரிய பதவிகள்**

4.1 பதவிப் பெயர் - உளவளத்துணை அலுவலர்
**சேவை வகுதி – கனிஷ்ட முகாமையாளர் (JM 1-1)**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 02**

**அ. தகைமைகள்**

**அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ உளவியல்/ குற்றவியல்/ சமூக வேலைகள் ஆகிய விடயத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேற்குறித்த இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் பதவிக்குரிய துறையில் 01 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத சேவை வகுதியில் தரம் II க்குரிய பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

3. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்சார் சேவை வகுதியில் தரம் II க்குரிய பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

4. வினைப்படுத்தல்/ அமுலாக்கல்/ விரிவாக்கல் அலுவலர் சேவை வகுதிக்குரிய பதவியொன்றில் 08 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஆ. வயதெல்லை**

22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

**இ. சம்பளக் குறியீட்டு இல – JM 1-1**

**ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் – JM 1-1 2016 (ரூ.42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580/-)**

(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

**05. வினைப்படுத்தல்/ அமுலாக்கல்/ விரிவாக்கல் அலுவலர் பதவிகள்**

**5.1 பதவிப் பெயர் - உதவி உளவளத்துணை அலுவலர்**
**சேவை வகுதி – வினைப்படுத்தல்/ அமுலாக்கல்/ விரிவாக்கல் அலுவலர் (MA 5-2)**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 05**

**அ. தகைமைகள்**

**அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ உளவியல்/ குற்றவியல்/ சமூக வேலைகள் ஆகிய விடயத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

பதவிக்குரிய துறையில் 01 வருட காலத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** *(பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)*

1. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்சார் சேவை வகுதி தரம் II இற்குரிய துறையின் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஆ. வயதெல்லை**

22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

**இ. சம்பளக் குறியீட்டு இல – MA 5-2**

**ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் – MA 5-2 2016 (ரூ.36,850 – 10 x 755 – 15 x 930 – 5 x 1,135 – 64,025/-)**

(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

5.2 பதவிப் பெயர் - உதவி விஞ்ஞான அலுவலர்
சேவை வகுதி – "வினைப்படுத்தல்/ அமுலாக்கல்/ விரிவாக்கல் அலுவலர்" **(MA 5-2)**
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 02

**அ. தகைமைகள்**

**அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனவியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

பதவிக்குரிய துறையில் 01 வருட காலத்திற்குக் குறையாத டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்** (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்சார் சேவை வகுதி தரம் II இற்குரிய துறையில் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஆ. வயதெல்லை**

22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

**இ. சம்பளக் குறியீட்டு இல – MA 5-2**

**ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் – MA 5-2 2016 (ரூ.36,850 – 10 x 755 – 15 x 930 – 5 x 1,135 – 64,025/-)**
(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

**06. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சார்) பதவிகள்**

6.1 பதவிப் பெயர் - தாதி அலுவலர்
சேவை வகுதி - முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சார் **(MA 2-1)**
பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 02

**அ. தகைமைகள்**

**அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/ தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்திறன் (NVQ) மட்டம் ஐந்து (05) க்குக் குறையாத மட்டத்தில் தாதி சேவையில் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

**அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் ஏற்புடைத்தாகும்.

**ஆ. வயதெல்லை**

18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

இ. சம்பளக் குறியீட்டு இல – **MA 2-1**

ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் – **MA 2-1 - 2016** (ரூ.30,310 – 10 x300 – 7 x 350 – 4 x 495 – **20 x 660 – 50,940/-)**

(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

6.2 பதவிப் பெயர் - ஆய்வுகூட தொழில்நுட்பவலர்

சேவை வகுதி – “முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சார்” **(MA 2-1)**

பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 02

அ. தகைமைகள்

அ.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/ தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்திறன் (NVQ) மட்டம் ஐந்து (05)க்குக் குறையாத மட்டத்தில் ஆய்வுகூட தொழில்நுட்பத்தில் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

அ.2 உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்

மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் ஏற்புடைத்தாகும்.

ஆ. வயதெல்லை

18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

இ. சம்பளக் குறியீட்டு இல – **MA 2-1**

ஈ. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் – **MA 2-1 - 2016** (ரூ.30,310 – 10 x300 – 7 x 350 – 4 x 495 – **20 x 660 – 50,940/-)**

(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)

<u>அனைத்து பதவிகளுக்கும் பொதுவான விடயங்கள்:</u>

விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு, பதவிக்குரிய கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் உகந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராகவும், சிறந்த நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

<u>விண்ணப்பிக்க வேண்டிய மொழிமூலம்</u>

விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் ஆங்கிலமொழியில் மாத்திரம் தமது விண்ணப்பத்தை அனுப்பி வைத்தல் வேண்டும்.

<u>ஆட்சேர்ப்புத் திட்டம்</u>

ஆட்சேர்ப்பு அதிகாரியினால் முடிவுசெய்யப்படுகின்றவாறு எழுத்திலான போட்டிப் பரீட்சையொன்றின் அத்துடன்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

<u>நியமனத்தின் தன்மை</u>

நிரந்தரமானதும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கும் உரித்துடையதுமாகும்.

**<u>விண்ணப்பக் கட்டணம்</u>**

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பக் கட்டணமாக ரூ.500 தொகையை எந்தவோர் இலங்கை வங்கிக் கிளையிலும் **'தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை'** என்ற பெயரில் **இலங்கை வங்கி இராஜகிரிய கிளையில் 1643** இலக்க வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து, அவ்வாறு பணம் வைப்புச்செய்த பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தமது கைவசம் வைத்துக்கொண்டு அதன் மூலப்பிரதியை (Deposit Slip) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

**முக்கிய குறிப்பு** : உதவி விஞ்ஞான அலுவலர், தாதி அலுவலர், ஆய்வுகூட தொழில்நுட்பவலர் ஆகிய பதவிகளுக்குரிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2021.02.25 ஆம் திகதி வெளியிடப்பட்ட செய்தித்தாள் **விளம்பரத்தின்படியும் 2021.02.25 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விளம்பரத்தின்படியும் விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பப் படிவமொன்றை அனுப்பிவைக்க வேண்டும் என்பதுடன், அத்தகையவர்கள் விண்ணப்பக் கட்டணமாக ரூ.500 தொகையைச் மீண்டும் செலுத்த வேண்டியதில்லை. இதற்கு முன்னர் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்தபோது, விண்ணப்பக் கட்டணத்திற்குரிய பணத்தொகையை வைப்புச்செய்த பற்றுச்சீட்டின் (Deposit slip) பிரதியையும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.**

தங்களது தகவல்களை 'A4' அளவில் இரு பக்கங்களையும் உபயோகித்து சபையின் இணைய தளத்திலுள்ள (www.nddcb.gov.lk) மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தி (உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிட்டு) உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2024.10.19** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ***'தவிசாளர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை', இல.383, கோட்டே வீதி, இராஜகிரிய'*** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும். அரச கூட்டுத்தாபனங்களில் அல்லது நியதிச்சட்ட நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை தாபன/திணைக்கள தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திராதவர்களின் விண்ணப்பங்களும், பூரணமற்ற விண்ணப்பங்களும், பணம் வைப்புச் செய்த பற்றுச்சீட்டின் மூலப்பிரதி இணைக்கப்படாத விண்ணப்பங்களும், மாதிரி விண்ணப்பம் அடங்கியிராத விண்ணப்பங்களும், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.**

**ஆட்சேர்ப்பு சம்பந்தமாக சபையினால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.**

**தவிசாளர்,**
**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை,**
**383, கோட்டே வீதி,**
**இராஜகிரிய.**

வெளியீட்டுத் திகதி: 2024.09.20